அரசாங்க நிருவாகச் சுற்று நிருபம் இல. 197(i)

எனது இல.543 ஈ 708 டி.
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7.
1982, ஜனவரி மாதம் 26ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

சம்பள மீளாய்வுக் குழுவின் விதப்புரைகளைச்
செயற்படுத்தல் - 1981.12.29ஆந் தேதிய
197ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று
நிருபத்திற்குத் திருத்தம்.

---

1981.12.19ஆந் தேதிய 197ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபம் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:-

(i) பந்தி 2 (ஆ)

மேற்போய்வளிப்பு நன்மைகளுக்குப் பதிலாகக் கொடுக்கப்பட வேண்டிய படி புதிய திரட்டிய வேதனத்திற் கணிக்கப்படல் வேண்டும்.

(ii) 4( xviii )ஆம் பந்தியை நீக்கிவிட்டுப் பின்வரும் பந்தியைச் சேர்க்க.

"கடன்வழங்கு சபை அங்கத்துவ உதவுத் தொகை மீட்புக்கள்:-

புதிய திரட்டிய வேதனத்தில் 1% (ஒருசதவீதம்) என்னும் வீதத்தில் மீட்புக்கள் செய்யப்படுதல் வேண்டும்."

(197ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ½% (அரைச்சதவீதம்) என்னும் அடிப்படையில் ஏலவே மீட்புச் செய்யப்பட்டிருப்பின் முற்றாக 1% (ஒருசதவீதம்) ஆக்குதற்கான மிகுதி ½% (அரைச்சதவீதம்) உடன் அடுத்த சம்பளத்திற் கழிக்கப்படுதல் வேண்டும்.)

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

ஒப்பம்: எம்.எல்.யு.டீ எஸ். மலல்கொட.
பிரதித் தாபனப் பணிப்பாளர்.